Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 06 விலை ரூபா: 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆனி 22 (06 07 1991) சனிக்கிழமை ஓசை: 138

## சமூகம் தராதவருக்காக உடன் நியமனம்

(கொழும்பு)

அமைச்சரவையினால் நியமிக்கப்பெற்ற கேள்விப் பத்திரச் சபையின் அங்கத்தவர்களாக உள்ள உறுப்பினர்கள் அதன் கூட்டங்களுக்கு ஒழுங்காகச் சமுகந்தராதிருக்கிறார்கள். இதனால் இக்கேள்விப் பத்திரச் சபைகளினால் தீர்க்கமான முடிவுகளை மேற்கொள்ள இயலாமலுள்ளதாகப் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளதனால், பின்வருவனவற்றை உடன் நடைமுறைப்படுத்துமாறு (6 ஆம் பக்கம் பார்க்க)

## அரச சார்பற்ற நிறுவனங்களும்

# சிங்கள குடியேற்றத்தில் தீவிர அக்கறை

### தம்பலகாமம் லக்விஜேகமவாகியது

(திருமலை)

திருமலை மாவட்டத்தில் சிறிலங்கா அரசாங்கமும் அரச சார்பற்ற நிறுவனங்களும் இணைந்து சிங்களக் குடியேற்றங்களை நிறுவுவதில் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றன. இதன் ஒரு பகுதியாக பூர்வீக தமிழ்க் கிராமமான தம்பலகாமம் 'லக்விஜேகம' எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

திருக்கோணமலை மாவட்டத்தில் திட்டமிட்ட குடியேற்றத்தின் ஒருபகுதியாக சிங்கள குடும்பங்களுக்கு வீடுகள் அமைத்துக்கொடுக்க அரசாங்க சார்பற்ற நிறுவனங்களும் முன்வந்துள்ளன. இவர்களுக்கு தேவையான காணி அரசாங்கத்தினால் வழங்கப்படுகிறது. இத்தகைய பல திட்டங்கள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மகாகாயபுரத்தில் ஏற்கனவே 102 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டு உள்ளன. வீடுகளை நிர்மாணித்துக் கொள்வதற்கென ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா 20 பேர்ச் காணியும் 15,000/- ரூபாவும் அரசினால் வழங்கப்படும். எஞ்சிய தொகை அரச சார்பற்ற நிறுவனங்களால் வழங்கப்படும். புனர்வாழ்வு, புனருத்தாரண சமூக நல அமைச்சர் பி. தயா (6ஆம் பக்கம் பார்க்க)

## தமிழகத்தில் வன்முறை

(சென்னை)

தமிழக சட்டப் பேரவையில் நேற்று முன்தினம் பாமக மக்கள் கட்சி உறுப்பினரான பண்ருட்டி எஸ். ராமச்சந்திரன் தாக்கப்பட்டதை தொடர்ந்து தமிழக மாநிலத்தின் பல்வேறு இடங்களில் வன்முறை (6ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா மதவாச்சி எல்லையில்

## வெடிகுண்டு விபத்தில் 22 இராணுவம் காயம்

(வவுனியா)

வவுனியா-மதவாச்சி எல்லையிலுள்ள உலுக்குளம் பூனாவை வீதியில் நேற்று இராணுவம் பயணம் செய்த வாகனத்தில் இருந்த வெடிகுண்டுகள் வெடித்ததால் 22 படைவீரர்கள் காயமுற்றனர். நால்வரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

பயிற்சிக்குச் சென்று விட்டு இராணுவ முகாமுக்குத் திரும்பிக்கொண்டிருக்கையில் நேற்று காலை இச்சம்பவம் இடம்பெற்றது.

## இல. தமிழர் மீதான நடவடிக்கை

## இந்திய வம்சாவளியினரை பாதிக்கக்கூடாது

– தொண்டமான்

இலங்கைத் தமிழர்கள் மீது தமிழக அரசு எடுக்கும் நடவடிக்கை இந்திய வம்சாவளியினரைப் பாதிக்கக் கூடாது என்று கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி தபால் தந்தி அமைச்சர் எஸ். தொண்டமான் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவுக்கு அனுப்பி வைத்திருந்த கடிதம் ஒன்றில் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இரண்டு பிரிவு தமிழர்கள் வாழ்கிறார்கள் என்று வகைப்படுத்தி தெரிவித்த தொண்டமான், இந்தியவம்சாவளியினர் தமிழ் நாட்டில் பாதிப்புக்குள்ளாகிறார்கள் என்ற நிலையேற்படக்கூடாது என்றும் அக்கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளார்.

## வல்வைச் சந்திரனே தாக்குதல் நடத்தினாராம்

(கொழும்பு)

கொழும்பு கூட்டுப்படைத் தலைமையகத்தின் மீது வாகனக் குண்டுத் தாக்குதலை நடாத்தியவர் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சந்திரன் என்று சிறிலங்கா புலனாய்வுத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும் இவ்வாண்டு ஜூன் மாதம் இருபதாம் திகதியன்றே இக்குண்டுத் தாக்குதலை நடாத்துவதென்று ஆரம்பத்தில் முடிவு செய்யப்பட்டிருந்தது என்றும் தெரிவிக்கப்பட்டது.

## புலிகளின் இருவாகனங்கள் கொழும்பில் பிடிபட்டனவாம்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுக்குச் சொந்தமான இரண்டு வாகனங்களை கொழும்பில் தாம் கைப்பற்றியுள்ளதாக சிறிலங்கா குற்றப்புலனாய்வு பிரிவினர் அறிவித்துள்ளனர்.

ஒரு இசுசு லொறியும், ஒரு நீல நிற இசுசு ட்ரக்வண்டியும் மே குற்றப் புலனாய்வுப் பணியகத் துப்பறியும் நிபுணர் குழுவினரால் தடுத்துவைக்கப்பட்டவையாகும் இதே போன்றதான இசுசு ட்ரக் வண்டியொன்றே கூட்டுப் படைத் தலைமையக குண்டுவெடிப்புக்கும் பயன்பட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் கூறியுள்ளன.

நிரந்தரமாக வெற்றுப் போத்தல்கள் அடுக்கப்பட்ட (6ஆம் பக்கம் பார்க்க)

## கைதானவர் வரதனின் மனைவி அல்ல, ஆசிரியை

(கொழும்பு)

கொழும்பு கூட்டுப் படைத் தலைமையக குண்டுவெடிப்புத் தொடர்பாக கொழும்பு பொலிசாரால் கைது செய்யப்பட்டவர் வரதனின் மனைவி அல்ல என்றும் இவர் ஓர் ஆசிரியை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர் கொடுத்த தகவல்களைக் கொண்டே மேற்படி குண்டுவெடிப்புத்தொடர்பாக பல முக்கிய தகவல்கள் வெளியாகின என்றும் இதன் மூலமே வரதன் தங்கியிருந்த தலாவாக்கொல்லை வீடு பொலிசாரால் முற்றுகையிடப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இப்பெண் தங்கியிருந்த வெள்ளவத்தை வீட்டுக்கு வரதன் அடிக்கடி வந்துபோவதாயும் தெகிவளை அல்போர்ட் பிளேஸிலுள்ள வீடொன்று முற்றுகையிடப்பட்டு அங்கு சந்திரனின் குடும்பப்படமும் தொகையும் கைப்பற்றப்பட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

## 2 தமிழர் சுட்டுக்கொலை; மாணவன் சித்திரவதை

(திருமலை)

திருமலை மாவட்டத்தைச் சுற்றி வளைத்து தேடுதல் வேட்டையை மேற்கொண்ட சிறிலங்கா இராணுவத்தினர் இரண்டு பொதுமக்களைச் சுட்டுக்கொன்றதுடன் பாடசாலை மாணவனொருவனை கடும் சித்திரவதைக்கு உள்ளாக்கியுள்ளதாகத் தெரியவருகிறது

இச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெற் (6ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவம் - புலிகள் பேராற்றில் மோதல்

(திருமலை)

திருமலை மாவட்டத்தில் பேராறு என்னுமிடத்தைச் சுற்றிவளைத்து தேடுதல் வேட்டையை மேற்கொண்ட சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே நடைபெற்ற மோதலில் இராணுவத்தரப்பில் பலத்த சேதமேற்பட்டுள்ளதாகவும் புலிகள் தரப்பில் மூன்று போராளிகள் வீரமரணமடைந்துள்ளதாகவும் தெரியவருகிறது.

இச்சம்பவம் கடந்த புதன்கிழமை காலை பத்து மணியள (6ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

### குமாரன், ராஜு, சிறில்

(யாழ்ப்பாணம்)

திருமலை மாவட்டத்தில் கடந்த புதன்கிழமை காலை சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் வீரவேங்கைகளான மேஜர் (91 ஆம் கொலனி, தம்பலகாமம்) ராஜு (கன்னியா, திருமலை) சிறில் (செல்வநாயகபுரம், திருமலை) ஆகியோர் வீரமரணத்தைத் தழுவியுள்ளனர் இவர்களுக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## பாராளுமன்றத்திற்குப் பலத்த பாதுகாப்பு ஏற்பாடு

(கொழும்பு)

கோட்டே சிறிஜெயவர்தன புரத்திலுள்ள பாராளுமன்றத்திலும் பாதுகாப்பு ஒழுங்குகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

தியவன ஓயாவிலும், பாராளுமன்ற வளாகத்தைச் சுற்றியும் பொலிஸார் இருபத்தி நான்கு மணிநேர ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக அரசாங்கச் செய்திக் குறிப்பு ஒன்று தெரிவிக்கிறது

பாதுகாப்பை மேலும் பலப்படுத்துவதற்காகப் பாராளுமன்ற வளாகத்துக்கு இட்டுச் செல்லும் வீதிகளில் மேலதிக வீதித் தடைகளும், சோதனை நிலையங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. வாகனங்கள் கடுமையாகச் சோதனையிடப்பட்டு, பாராளுமன்ற வளாகத்துக்கு அப்பால் நிறுத்தி வைக்கும்படி பணிக்கப்படுகிறது.

உத்தியோகம் காரணமாக அழைக்கப்பட்டால் மாத்திரம் பாராளுமன்றத்திற்குள் நுழையலாம். அழைக்கப்பட்ட அதிகாரியின் அடையாளம்காணப்பட்ட பிறகு, அவருக்குத் தற்காலிக நுழைவுச்சீட்டு ஒன்று வழங்கப்படும். அவருக்கு எங்கே வேலையுள்ளதோ அந்தப்பகுதிக்கு மாத்திரம் அவர் அனு (6ஆம் பக்கம் பார்க்க)

## சிவில் நிர்வாகம் ஏற்படுத்த

## சிறிலங்கா அரசாங்கம் புதிய கண்டுபிடிப்பு

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறைக்கு உணவுக்கப்பல்களை அனுப்புவதன் மூலம் யாழ். மாவட்டத்தில் சிவில் நிர்வாகத்தை நடைமுறைப்படுத்தலாம் என புதிய வழி ஒன்றை சிறிலங்கா அரசாங்கம் கண்டுபிடித்துள்ளது.

தற்பொழுது ''ரைப்பான்'' என்ற உணவுக்கப்பல் சுமார் 750மெற்றிக்தொன் அரிசி, மா போன்ற உணவுப் பொருள்களை ஏற்றிக்கொண்டு வட (6ஆம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்
இலங்கை

## புதிய மாணவர்களைப் பதிவு செய்தல் 1990/1991

இப்பல்கலைக் கழகத்தில் 1990/1991 ஆம் கல்வியாண்டிற்கான புதிய மாணவர்களைப் பதிவு செய்வதற்கான விபரங்கள் வருமாறு

மாணவர்கள் தமது பதிவிற்கான பின்வரும் ஆவணங்களுடன், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகக் கைலாசபதி கலையரங்கில் கீழ்க் குறிப்பிட்ட திகதியின்படி நேரடியாகச் சமுகமளிக்கவும்:

1. பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அனுமதிப் பத்திரம்
2. பிறப்புச் சான்றிதழ் (மூலப் பிரதி)
3. பாடசாலை விலகைப் பத்திரம்
4. போட்டோ பிரதிகள் 8 (பாஸ்போட் அளவு)
5. தேசிய அடையாள அட்டை

கட்டணங்கள்

1. கலைப்பீட மாணவர்கள் பதிவுக் கட்டணமாக ரூபா 60/- செலுத்தும்படி வேண்டப்படுகிறார்கள்.
2. புவியியலை ஒரு பாடமாக எடுக்கும் கலைப்பீட மாணவர்களும், விஞ்ஞான, விவசாய மருத்துவபீட மாணவர்களும் பதிவுக் கட்டணமாக ரூபா 110/- செலுத்தும்படி வேண்டப்படுகிறார்கள்.
3. சைநூலுக்கான கட்டணம் :
மருத்துவம் ரூபா 20/-
விஞ்ஞானம் ரூபா 30/-

பயிற்சி நெறி
கலை
பதிவு செய்யும் திகதி
29-07-1991
நேரம்
காலை 9.00-4.00

பயிற்சி நெறி
வர்த்தகம் /முகாமைத்துவம்
பதிவு செய்யும் திகதி
30-07-1991
நேரம்
காலை 9.00-4.00

பயிற்சி நெறி
விஞ்ஞானம்
பதிவு செய்யும் திகதி
31-07-1991
நேரம்
காலை 9.00-4.00

பயிற்சி நெறி
மருத்துவம் /விவசாயம்
பதிவு செய்யும் திகதி
01-08-1991
நேரம்
காலை 9.00-4.00

மேற் கூறப்பட்ட திகதிகளில் பதிவு செய்யத் தவறிய மாணவர்கள் பதிவு செய்யத் தவறியவர்களாகக் கருதப்படுவர்.

— பதிவாளர்

(R/2779)

## வரிவிளம்பரம்

### பரீட்சை (ஆண்டு4)

புதிய கல்வி நிலையத்தால் நடாத்தப்படும் ஆண்டு 4 பரீட்சை 7-7-91 ஞாயிறு மு. ப 8.00/ பி. ப 1.00 மணிக்கு நடைபெறும் மக்கள் வைத்திய சாலை முன்பாக சொக்குவில் மேற்கு பி. ப 4.00 மணிக்கு பரீட்சை நடைபெறும் பதிவு செய்யவும் 219, நாவலர் வீதி யாழ்ப்பாணம் (R-1509)

### வைத்தியசேவை

பிணிதோசம், மனத்தடுமாற்றம், முகப்பரு, மற்றும் நீடித்த வியாதிகள் குணப்படுத்தி இன்ப வாழ்வு அமைய இலவச ஆலோசனை மூலம் சிகிச்சை வேளாங்கண்ணி வைத்திய சாலை வைத்தியர் எம். கருணாகரன் 616 மானிப்பாய் வீதி, ஓட்டுமடம் யாழ்ப்பாணம் (R-1512)

### அக்குபஞ்சர் டிப்ளோமா வகுப்புக்கள்

வட இலங்கை அக்குபஞ்சர் சங்கத்தால் நடாத்தப்படும் டிப்ளோமா வகுப்புகட்கு விண்ணப்பம் கோரப்படுகின்றன. 15-07-91க்கு முன் 35, நவலர் வீதி. யாழ்ப்பாணத்தில் தொடர்பு கொள்க. (R/1513)

### இலவச அக்குபஞ்சர் சிகிச்சை

மருத்துவக் கல்லூரி விரிவுரையாளரால் இலவச அக்குபஞ்சர் சிகிச்சை சகல ரோகிகட்கும் அளிக்கப்படும். திங்கள், புதன், வெள்ளி, 101-(33) பலாலி வீதி, கந்தர் மடத்தில் ஏனைய நாட்களில். நவீன வைத்தியசாலை, மானிப்பாய். (R/1515)

### போதனாசிரியர் கருத்தரங்கு

பயிற்சி ஆசிரியர்களுக்கான தொலைக்கல்வி ஆசிரியர் பயிற்சி நெறி போதனாசிரியர் கருத்தரங்கு எதிர்வரும் 8 ஆம் 9 ஆம் திகதிகளில் (திங்கள், செவ்வாய்) யாழ். கல்வித் திணைக்களத்தில் காலை 8-30 முதல் மாலை 4-30 வரை நடைபெறும்.

இக்கருத்தரங்கிற்குத் தெரிவு செய்யப்பட்ட சிரேஷ்ட உதவி போதனாசிரியர்கள் யாவரும் சமுகம் கொடுக்கும்படி யாழ். பிரதேசக் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் கேட்டிருக்கின்றார், அழைப்புக் கடிதங்கள் அவரவர் முகவரிக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன.

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்
சண்முகம் – மாரிமுத்து
(நயினை)

மலர்வு 02.10.1917 உதிர்வு 16-06-1990

திதி 06-07-1991

ஆண்டுபிர மோதூதம் ஆனி அபரபக்கம்
பூண்ட நவமியிலே போயணைந்தார் - நீண்டபுகழ்
சண்முகம் மாரிமுத்துச் சான்றோர், நயினை அமர்
அம்மாளின் பூம் பொன் அடி
நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும்

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, சகோதரர்கள்,
மகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்

மா. வேதநாதன்,
கலாசாலை வீதி,
திருநெல்வேலி.
(R/1514)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
07-02-1954

ஆண்டவன் அடியில்
17-06-1990

### அமரர் நல்லதம்பி மகேசன்

(பரு. ஹாட்லிக்கல்லூரி, யாழ். பல்கலைக்கழகம் ஆகியனவற்றின் பழைய மாணவனும் மட்டக்களப்பு பல்கலைக்கழக விரிவுரையாளரும்)
புலோலி
திதி: 06 - 07 - 1991

பந்தபாசங்கள் எல்லாம் மறந்து விட்டு
மற்றுமிறேன் இறைவன் தாள் எனப்போனாயோ?
உன்னருகில் யாருமில்லை வாழ்வினிலே வேறென்ன
உனையிழந்து மலருகின்ற மொட்டுக்கள் வாடிநிற்குதே
மலருக்கு வசந்தமேது மணமின்றி எங்கும்
மரமான எனக்கு வசந்தமெங்கே நீயின்றி

கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர், பதிவாளர், விரிவுரையாளர்களுக்கும் திருமதி தேவதாஸ், திரு. க. கார்த்திகேசு, திரு.எஸ்.இராசநாயகம், கணக்காளர் திரு. இராமலிங்கம் குடும்பத்தினருக்கும் நன்றி கூருகின்றோம்.

"பொன்பொழில்"
பல்லப்பை,
புலோலி கிழக்கு, புலோலி.

உன்பிரிவால் துயரும்
குடும்பத்தினர்.

(B/2782)

## ஆண் தாதிகள் தேவை

தனியார் வைத்திய நிறுவனமொன்றில் கடமை புரிவதற்கு ஆண் தாதிகள் தேவைப்படுகின்றார்கள். தகுதியானவர்கள் உடனடியாக விண்ணப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். தகுந்த ஊதியம் வழங்கப்படும். பயிற்சிபெற விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பப்படிவங்களை ஈழநாதம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

## கார் விற்பனைக்கு

மொறிஸ் மைனர்

இலக்கம்:-2 ஸ்ரீ 2815
உடன் விற்பனைக்கு உண்டு

தொடர்பு:-
3/6 கேசாவில் பிள்ளையார் கோயில் வீதி,
(நாச்சிமார் கோவிலடி)
யாழ்ப்பாணம். (B/2783)

## நினைவு கூருகின்றோம்...

### 1991 - 07 - 06

1987ஆம் ஆண்டு இதேதினத்தில் அம்பாறை செம்மணிக்குளத்தில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 6 தமிழர்கள்

1988ஆம் ஆண்டு கொக்கட்டிச்சோலையில் தேச விரோதிகளால் கோடரியினால் வெட்டிக் கொல்லப்பட்ட

**காளி** (சின்னத்தம்பி ஞானசேகரம் - திரும்பழுகாமம்)

1989ஆம் ஆண்டு அனுராதபுரத்தில் சிறிலங்காப் படையினரால் சுட்டக்கொலலப்பட்ட பரந்தனைச் சேர்ந்த பொதுமகன்

1990ஆம் ஆண்டு பலாலியில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

**பிரதீபன்|உமா** (சுப்பையா சந்திரன் - கண்டி)

கிண்ணியாவில் முஸ்லிம் ஊர்காவல்படையினரால் உயிருடன் ரயர் போட்டுக் கொளுத்தப்பட்ட 6 தமிழர்கள். அம்பாறை கஞ்சிகுடிச்சாறுபகுதியில் சிறிலங்காப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 5 தமிழர்கள்

மூதூரில் சிறிலங்காப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 10 தமிழர்கள்

தமிழீழக் கடற்பரப்பில் (தலைமன்னார்) சிறிலங்காப்படையினரின் தாக்குதலுக்குள்ளாகி மூழ்கடிக்கப்பட்ட படகில் சென்ற 9 தமிழர்கள்

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

- விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B/2780)

விடுதலைப் புலிகள்

# கலை பண்பாட்டுக் கழகத்தின் முத்தமிழ் விழாமலர் - 1991

## -ஒரு நோக்கு


கலாநிதி நா. சுப்பிரமணியன்
முதுநிலை விரிவுரையாளர் - தரம் 1
தமிழ்த்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்
திருநெல்வேலி, யாழ்ப்பாணம் இலங்கை


மாநாடுகள், விழாக்கள், ஆய்வு நிகழ்ச்சிகள் ஆகியவற்றை ஒட்டிச் சிறப்பு மலர்கள் வெளியிடப்படுவது கடந்த பல ஆண்டுகளாக நடைமுறையில் இருந்துவரும் மரபாகும். இவ்வாறான சிறப்பு மலர் வெளியீடுகளின் முக்கிய நோக்கம் இருவகைப்படும்.

அ. நிகழ்த்தப்படும் மாநாடு, விழா, ஆய்வு ஆகியன தொடர்பான செய்திப் பொருளையும் அதற்குச் சமகாலக் கலைஞர், அறிஞர் மட்டத்தில் வழங்கப்படும் கவனிப்பையும் கணிப்பையும் பொது மக்களுக்குப் புரியவைப்பது; பொதுமக்களின் உணர்வையும் சிந்தனையையும் குறித்த விடயத்தின்பால் ஈர்ப்பது.

ஆ. வரலாற்றுக்குப் பயன்படத்தக்க ஆவணங்களைத் தொகுத்து அச்செழுத்தில் நிலைபெறச் செய்வது.

இத்தகைய நோக்கங்களினடிப்படையில் குறிப்பிடத்தக்க அளவு தொகையான சிறப்பு மலர்கள் ஈழத்தில் மலர்ந்துள்ளன. இவற்றுட் பல, சமூக நிறுவனங்கள் சார்ந்தவை; சில, தனிமனித நிறுவனங்களாகச் செயற்பட்ட மாமனிதர்களின் ஆளுமைகளைப் போற்றியும் சாதனைகளை நினைவு கூர்ந்தும் அமைந்தவை. சமூக நிறுவன வெளியீடு என்ற வகையில் அண்மையில் மலர்ந்துள்ளவற்றில் தனிக் கவனத்துக்கும் கணிப்பிற்கும் உரியதாக அமைவது விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் முத்தமிழ் விழா மலர் 1991 ஆகும். இம்மலர் தனிக் கவனத்தைப் பெறுவதற்கான முக்கிய காரணம் பல நூற்றாண்டுகளாக அடிமை இருளில் மூழ்கியிருந்த தமிழினம் விடுதலையின் வைகறையைத் தரிசிக்கத் தொடங்கிய சூழலின் முதல் முகிழ்ப்பு என்ற வரலாற்று முக்கியத்துவ நிலையாகும்.

பொதுவாகத் தமிழ் விழாக்கள், தமிழ் மாநாடுகள் என்பவற்றை ஒட்டி வெளிவரும் சிறப்பு மலர்கள் தமிழர் சமூகத்தின் சமூக—பண்பாட்டுப் பெருமைகளை இனங்காட்டுவதும், விளக்குவதும் வரலாற்றுச் செயல் நெறியைச் சுட்டிக்காட்டுவதுமான நோக்கங்களின் அடிப்படையில் தயாரிக்கப்படுவன. ஆனால் இந்த முத்தமிழ் விழா மலர் மேற்படி நோக்கங்களுடன் மட்டும் அமையாது (அவற்றையும் உள்ளடக்கி) விடுதலையை வென்றெடுக்கும் காலகட்டத்துக்குரிய உணர்வோட்டங்களையும், எதிர்பார்ப்புக்களையும், செல்ல வேண்டிய திசையையும் உணர்த்தும் தொனிப்பொருள் கொண்ட வகையில் தனித்தன்மை உடையதாகிறது. விடுதலை விரும்பிகளால் கடந்த பல ஆண்டுகளாக வெவ்வேறு பத்திரிகைகள், குறுவிதழ்கள், மலர்கள், துண்டுப் பிரசுரங்கள், கலை இலக்கியங்கள் முதலியவற்றில் பரவலாக வெளிப்படுத்தப்பட்டு வந்த மேற்படி உணர்வோட்டங்கள், எதிர்பார்ப்புக்கள் திசைவழி என்பன சமூக இயக்கத்தோடு ஒட்டி வளர்ந்து திரண்டு ஒருமை பெற்றுள்ள ஒரு நிலையை இந்த முத்தமிழ் விழா மலரில் அவதானிக்க முடிகிறது. விடுதலைப் போரை முன்னெடுத்துச் செல்லும் நிறுவனத்தின் தயாரிப்பு என்ற வகையில் இம்மலர் மேற்படி தனித்தன்மை — ஒருமை நிலை என்பன கொண்டதாக அமைதல் இயல்பே.

மலரில் இடம்பெறவுள்ள ஆக்கங்கள் கட்டுரை, சிறுகதை, கவிதை என முப்பிரிவின. கட்டுரைகளாக அமைந்தவற்றில் ஒரு வகையின வரலாறு தொடர்பானவை. இன்னொரு வகையின கலை இலக்கியம் சார்ந்தவை. வரலாறு சார்ந்த கட்டுரைகளில் வ. சு. அதிரூபசிங்கம் எழுதிய 'இலக்கியம் போற்றிடும் எம்மவர் போர்த்திறம்' என்ற தலைப்பில் அமைந்தது பொதுவாகத் தமிழரின் பண்டைக்கால வீரம் பற்றி — சங்ககாலப் போர்த்திறம் பற்றிப் பேசுவது. தமிழ் ஆய்வாளர் பலரால் முன்னரே சிந்திக்கப்பட்ட—எழுதப்பட்ட இவ்விடயம் இக்கட்டுரையில் மீண்டும் நினைவு கூரப்படுகிறது.

ஈழத்துத் தமிழரின் வரலாறு தமிழீழ வரலாறு — தொடர்பாகத் தனிக்கவனம் செலுத்தி அமைந்த கட்டுரைகளாக திரு. ப. புஷ்பரட்ணம், திரு. க. குணராஜா, கலாநிதி சி. க., சிற்றம்பலம் ஆகியோருடைய ஆக்கங்களைச் சுட்டலாம். யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகர் — புதிய நோக்கு" என்ற தலைப்பில் அமைந்த திரு. ப. புஷ்பரட்ணத்தின் கட்டுரையிலே கி. பி. 13ஆம் நூற்றாண்டுக்கு முன்பே ஈழத்தில் தமிழரின் அரசு தோற்றம் பெற்றுவிட்டது என்ற கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது. அத்துடன் யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகராக இலக்கியங்கள் பலவும் சுட்டிநிற்கும் 'சிங்கை நகர்' எது என்பதைப் பற்றிய சிந்தனைகளையும் அவர் முன்வைத்துள்ளார். அந்நகர் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு வெளியே தெற்கில் பூநகரிப் பகுதியைச் சார்ந்ததாக அமைந்திருந்திருக்கலாம் என ஊகிக்கத்தக்க வகையில் அவரது கட்டுரையின் தொனி அமைகிறது.

மேலும் தெளிவான ஆதாரங்களுடன் நிறுவப்படவேண்டிய இவ்விடயத்துக்கு முன்முயற்சியாக இக்கட்டுரை அமைகிறது. பூநகரிப் பகுதியின் தொல்லியல் தொடர்பாக இக்கட்டுரையாளர் அவ்வப்போது ஆய்வரங்குகள், பத்திரிகை— சஞ்சிகைகளில் வெளிப்படுத்தி வந்த சிந்தனைகளின் பரிணாமமாக இந்த ஆய்வுக் கட்டுரை அமைந்துள்ளது.

திரு. க. குணராசா கலாநிதி சி. க. சிற்றம்பலம் இருவரின் கட்டுரைகளும் ஈழத்தின் வரலாற்றுக் காலகட்டங்களில் தமிழர் பிரதேசங்கள் எவை எவை என்பதையும் அவை எவ்வாறு இழக்கப்பட்டு வந்துள்ளன என்பதையும் கட்டம் கட்டமாக உணர்த்தி அமைவன. புவியியலாளரான க. குணராசா அவர்கள் பொருத்தமான வரைபடங்களின் துணையுடன் வரலாற்றுப் போக்கை விளக்குகிறார். வரலாற்றியலாளரான சி. க. சிற்றம்பலமவர்கள் ஈழ வரலாறு தொடர்பான தொன்மையான சான்றுகளின் தகுதிப்பாட்டை மதிப்பிடுவதில் தனிக்கவனம் செலுத்தியுள்ளார். இருவரது கட்டுரைகளும் ஈழத்தின் நாகரிகக் கர்த்தாக்கள் திராவிடரே என்பதைச் சுட்டி அமைகின்றன.

"இவை அனைத்தும் (சான்றுகள்) இலங்கையில் சிங்கள ஆரியர் வருவதற்கு முன்னரே திராவிடமக்களும் அவர் தம் கலாசாரமும் நிலை பெற்றிருந்தன என்பதனை நிரூபித்திருக்கின்றன" என க. குணராசா கூறுவர். (ப. 130)

"ஈழத்தின் நாகரிகக் கர்த்தாக்கள் திராவிடரே என்பது புலனாகிறது" என்பர் சி. க. சிற்றம்பலம். (ப 163) மஹாவம்சம் என்ற பாளி நூல் கூறும் விஜயன் பற்றிய செய்தி ஒரு கட்டுக்கதை எனக் கூறும் சி. க. சிற்றம்பலம் அவர்கள் வல்லிபுரப் பொற்சாசனம் தொடர்பாக ஆய்வாளர்கள் முன்வைத்துள்ள கருத்துக்களிலும் ஐயம் எழுப்புகிறார். அச்சாசனத்தில் குறிப்பிடப்படும் 'வக' என்ற மன்னன் அநுராதபுரத்தை ஆண்ட 'வசப' (கி. பி. 2ஆம் நூ. ஆ) என்னனாகக் கொள்ளப்பட வேண்டியது கட்டாயமில்லை என்பதும் அவன் வடபகுதியை ஆண்ட வேறொரு அரசனாகக் கூட இருக்கலாம் என்பதும் அவரது சிந்தனைகள். (ப. 167) வல்லிபுரப் பொற்சாசனம் வடபகுதியில் கி. பி. 2ஆம் நூற்றாண்டில் நிறுவப்பட்ட விகாரை பற்றிய செய்தியைத் தருவது. இதனை ஆதாரமாகக் கொண்டு அக்காலப்பகுதியில் அநுராதபுரத்துக்கு வடக்கே தனித்த சிங்கள மேலாதிக்கம் நிலவியிருந்தது என்ற வகையில் சிங்கள பேரினவாதிகளின் சிந்தனைகள் அமைந்தன. மேற்படி சாசனம் சுட்டும் 'வக' என்பவன் அநுராதபுரத்து 'வசப' ஆகக் கொள்ளப்பட வேண்டிய கட்டாயமில்லை என்ற சிந்தனையை முன்வைத்ததன் மூலம் பேரினவாதிகளின் ஆதிக்க உணர்வு சார்ந்த எண்ணப்பாங்கினைச் சிற்றம்பலம் மறுதலிப்பவராகிறார்.

க. குணராசா அவர்கள் தமிழரின் பிரதேசங்கள் காலத்துக்குக் காலம் படையெடுப்பு, குடியேற்றம் என்பவற்றால் சிங்களவரிடம் பறிபோன வரலாற்றை விவரிக்கிறார். சி. க. சிற்றம்பலம் அவர்கள் தமிழரின் பிரதேசங்கள் எவை எவை என்பது தொடர்பாகக் காலந்தோறும் நிலவிய கருத்துக்களைச் சான்றுகளுடன் எடுத்துரைப்பதில் முக்கிய கவனம் செலுத்தியுள்ளார். இருவரின் கட்டுரைத் தலைப்புக்களும் (குணராசா - "குடியேற்றங்களால் இழந்துபோன தமிழ்ப் பிரதேசங்கள்" சிற்றம்பலம்-தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசம்") ஒன்றையொன்று சார்ந்தமைந்துள்ள பொருத்தப்பாடு நமது சிந்தனைக்குரியதாகின்றது.

இருவரது கட்டுரைகளிலும் காணப்படும் அடிப்படை ஒரு முரண்பாட்டினையும் இங்கு சுட்டிக் காட்ட வேண்டியது அவசியமாகிறது. குணராசா அவர்கள் இலங்கையின் ஆதிக் குடிகளில் ஒரு பிரிவினரான இயக்கரிடமிருந்து சிங்கள ஆரியர் தென்னிலங்கையைப் பறித்துக் கொண்டனர் என்ற கருத்துடையவர் (ப. 131) இதன்படி அவர் சிங்களவர்களை ஆரிய இனத்தினர் என்றும் அவர்கள் தமிழரான திராவிடரிடமிருந்து அடிப்படையில் வேறுபட்டவர்கள் என்றும் கருதுவது தெரிகிறது. ஆனால் சிற்றம்பலம் அவர்கள் தமிழர் சிங்களவர் இருபாலாருமே திராவிட பாரம்பரியத்தினர் எனக் கொள்கிறார். இதனை, "இந்நாட்டின் நாகரிகத்திற்கு வித்திட்ட திராவிடர் கலாசாரம் ஈழத்திற்குத் தென்னிந்தியாவிலிருந்து புகுந்தது. இதனை உருவாக்கியோர் தற்கால சிங்கள - தமிழ் மொழி பேசுவோரின் மூதாதையினராவர்." (ப. 184) என்ற அவரது கூற்று உணர்த்தும். சிற்றம்பலம் அவர்கள் கட்டுக்கதை எனக் கருதும் விஜயன் வரலாற்றை குணராசா அவர்கள் உண்மை நிகழ்ச்சி எனச் சொல்கிறார் என்பதும் ஈண்டு சுட்டிக்காட்டப்பட வேண்டியதாகிறது.

க. சொக்கலிங்கம், (சொக்கன்) கலாநிதி அன்ரன் பாலசிங்கம் ஆகிய இருவரின் கட்டுரைகளும் ஈழத்தமிழரின் விடுதலைப் போராட்ட வரலாறு தொடர்பானவை. "தமிழீழ வரலாறு கண்ட வீரபரம்பரை - 'சங்கிலி' முதல் 'பிரபாகரன்' வரை" என்ற தலைப்பில் சொக்கன் அவர்கள் சங்கிலி, கைலாய வன்னியன், பண்டார வன்னியன், பிரபாகரன் ஆகிய நால்வரின் வீரவரலாறுகளைத் தொடர்புபடுத்திக் காட்டுகிறார். வரலாற்றாய்விலே பொய்மைகள் இனங்கண்டு களையப்பட்டு புதைநிலையிலான உண்மைகள் வெளிக்கொணரப்பட வேண்டும் என்ற உணர்வோட்டத்தை முன்வைத்துத் தமது கட்டுரையைத் தொடங்குகிறார் சொக்கன் அவர்கள். "இலங்கையின் ஆதிக்குடிகள் திராவிட இனத்தினரான தமிழரே" என்ற கருத்து நிலைக்கான சான்றுகளை முன்வைத்து வளரும் இவரது கட்டுரை மேற்சுட்டிய நாற்பெரும் வீரர்களின் வரலாறுகளை விரித்துச் சென்று 'இந்த மண் எங்களின் சொந்தமண்' என்ற குரலுடன் நிறைவுறுகிறது. பிரபாகரன் தலைமையில் ஈழத்தில் சுதந்திரப் புலிக்கொடி பறக்கும் என்ற நம்பிக்கை இக்கட்டுரையில் முன்வைக்கப்பட்டுள்ளது. விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் அவர்களோடு மேற்படி சங்கிலி முதலிய மூவரையும் தொடர்புபடுத்தியுள்ள ஒப்பியற்பார்வை வரவேற்கத்தக்க ஒரு புது அணுகுமுறை எனலாம். இப்பார்வை மேலும் ஆழம் பெற வேண்டியதொன்றாகும். அதற்கு சங்கிலி, கைலாய வன்னியன், பண்டார வன்னியன் ஆகிய மூவர் தொடர்பாகவும் தரப்படும் தகவல்களின் வரலாற்று மெய்மைகள் தெளிவுபடுத்தப்பட வேண்டும்; இலக்கியம் சார்ந்த புனைவுத் தன்மைகட்கு அப்பாலான புதைநிலை உண்மைகள் வெளிக்கொணரப்பட வேண்டும்.

கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்களின் கட்டுரை "இரண்டு தசாப்தங்களும் புலிகளும்" என்ற தலைப்பில் அமைந்தது. தமிழீழ விடுதலைப் போரின் கடந்த இரு தசாப்தகால வரலாற்றுச் செல்நெறியை இனங்காட்டும் முயற்சி இது. தமிழரின் உரிமைகளைப் பாராளுமன்றப் பாதை வழியாகப் பெற முடியாது என்பது உணரப்பட்ட வேளையில் 1970 களில் வன்முறை தழுவிய போராட்டம் கருவாகி உருவாகியது. இப்போராட்டத்துக்கு ஒரு தெளிவான, உறுதியான வடிவத்தைக் கொடுக்கும் வகையில் பிறப்பெடுத்ததே விடுதலைப் புலிகள் இயக்கம். 1972 இறுதிக் கூற்றில் 'புதிய தமிழ்ப் புலிகள்' என்ற பெயரில் பிறப்பெடுத்த இவ்வியக்கம் 1976 மே 5 இல் தமிழீழ விடுதலைப் புலிகள் எனப் பெயர் மாற்றம் எய்தியது. இவ்வமைப்பு திட்டமிட்ட வகையில் ஆயுதந் தாங்கியும் இராஜதந்திரங்களை மேற்கொண்டும் நடத்திவந்த போராட்டங்கள் இன்று ஈழ விடுதலைப் போரைத் தென்னாசியக் கண்டத்தின் முதன்மை வாய்ந்த தேசிய விடுதலைப் போராட்டமாக வளர்த்திருக்கின்றன. இந்த வரலாற்று வளர்ச்சியை விரித்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது. இக்கட்டுரையில் தரப்படும் செய்திகள் சமகால நிகழ்ச்சிகள் என்பதால் நம்முள் பலரும் இவற்றை முன்னரே அறிந்துள்ளோம். எனினும் அவ்வப்போது நிகழ்ந்துள்ள சம்பவங்களை மட்டும் அறிந்தும் அனுபவித்துமுள்ள எமக்கு அச்சம்பவங்களின் ஊடாக ஒரு இயக்கத்தின் வரலாற்றுச் செல்நெறி எவ்வாறு அமைந்தது என்பதைத் தெரிந்து, தெளிந்து கொள்வதற்கு இக்கட்டுரை துணை புரிகின்றது. கட்டுரையாசிரியரான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகராகத் திகழ்ந்து வருவதால் இயக்கத்தின் உத்தியோக பூர்வமான வரலாற்று ஆவணமாக இக்கட்டுரை கொள்ளத் தக்கது.

கலை இலக்கியம் சார்ந்த கட்டுரைகளிலே செ. யோகராசா எழுதிய "புகலிட இலக்கியங்கள் ஒரு கண்ணோட்டம்" என்பது ஈழத்து நவீன தமிழ் இலக்கியத்தின் புத்தம் புதிய முகிழ்ப்பொன்றை இனங்காட்டுவதாக அமைந்தது. ஈழத்தின் அண்மைக்காலச் சூழல் காரணமாக (1983 இன் பின்) புலம்பெயர்ந்தோர் அயல்நாடுகளில் - குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் - வாழ்க்கையை அமைத்துக் கொண்டவர்கள் மேற்கொண்டுள்ள இலக்கியமுயற்சிகளை இக்கட்டுரை சுருக்கமாகத் தொட்டுக் காட்டுகிறது. சஞ்சிகை வெளியீடுகள், புனைகதை - கவிதை முயற்சிகள், நாடகம் ஆகிய வகைகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள புகலிட இலக்கிய முயற்சிகள் பற்றிய சுருக்கமான பொது மதிப்பீட்டை முன்வைத்துள்ள செ. யோகராசா அவர்கள் அம்மதிப்பீட்டிலே மேற்படி இலக்கிய முயற்சிகள் பெரும்பாலும் தாயக மண்ணைத் தழுவியே அமைந்துள்ளன என்கிறார்; புகலிட வாழ்நிலைப் பிரச்சினைகள் கூர்மையுடன் சித்திரிக்கப்பட வேண்டும் என்ற கருத்தை முன்வைக்கிறார். அதற்கான சாத்தியப்பாடுகளும் காணப்படவே செய்கிறது என்கிறார்.

கலாநிதி சபா ஜெயராசா எழுதியுள்ள "தொடர்பியல்- அதிகம் பயன்படுத்தப்படுவதும் அதிகம் ஆராயப்படாததுமான புலம்" என்ற கட்டுரை தொடர்பியற் சாதனங்களான பத்திரிகை - சஞ்சிகை, வானொலி, தொலைக்காட்சி என்பனவற்றின் பயன்பாட்டம்சங்களைச் சுருக்கமாகத் தொட்டுக்காட்டுவது. விரிவான நிலையில் கவனத்தைப் பெறவேண்டிய ஒரு ஆய்வுத்துறை தொடர்பான ஒரு அறிமுகமாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

கலாநிதி இ. பாலசுந்தரம், திரு. க. சிதம்பரநாதன், கந்தையா, ஸ்ரீகணேசன், காயத்திரி கலாநிதி சோ. கிருஷ்ணராஜா ஆகியோர் எழுதிய கட்டுரைகள் கலை சார்ந்தவை. பாலசுந்தரம் அவர்கள் "ஈழத் தமிழர் நாட்டார் கலைகள்" என்ற தலைப்பிலே ஈழத்தின் கலைப் பாரம்பரியங்களைத் தொகுத்துத் தந்துள்ளார். அவைக்காற்றுகலைகள், இலக்கியக் கலைகள், விளையாட்டு, ஒப்பனைக்கலை ஆகிய நால்வகைகளில் நிலவும் பல்வேறு கலை வடிவங்களை இக்கட்டுரை விளக்கி அமைகிறது.

"ஈழத்தமிழருக்கென்று ஓர் இசை நடனப் பாரம்பரியம்" என்ற தலைப்பில் கந்தையா ஸ்ரீகணேசன் எழுதியுள்ள சிறு கட்டுரை ஈழத் தமிழரின் பாரம்பரிய கதை மரபுகளான கூத்திசை, நாட்டாரிசை கிராமிய மக்கள் மத்தியில் நிலவும் ஆடல்கலை என்பன மக்கள் மத்தியில் உரிய கவனிப்பைப் பெறவேண்டும் என்ற ஆவலை முன்வைப்பது. க. சிதம்பர

(4 ஆம் பக்கம் பார்க்க)

# துணைவேந்தர் தலைமையில் பட்டமளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக் கழகத்தின் பதினொராவது பட்டமளிப்பு விழா இன்று பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது இந் நிகழ்ச்சிக்கு துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா தலைமை தாங்கி பட்டங்களை வழங்குவார்.

கலாநிதிப் பட்டத்தை இரண்டு பேரும், முது மெய்யியல் மாணிப்பட்டத்தை ஒருவரும், 17 பேர் முதுகலை மாணிப்பட்டத்தையும், 4 பேர் முது விஞ்ஞானமாணிப் பட்டத்தையும், 66 பேர் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பட்டத்தையும், 179 பேர் கலைமாணிப் பட்டத்தையும், 51 பேர் நிர்வாகமாணிப் பட்டத்தையும், 75 பேர் வர்த்தக மாணிப் பட்டத்தையும், 66 பேர் மருத்துவசத்திர சிகிட்சை மாணிப் பட்டத்தையும், 146 பேர் விஞ்ஞானமாணிப் பட்டத்தையும், 24 பேர் இசைக்கலை மாணிப்பட்டத்தையும், 8 பேர் நாட்டியக் கலைமாணிப் பட்டத்தையும், ஒருவர் மிருதங்க இசைக்கலை மாணிப்பட்டத்தையும், 4 பேர் சித்தமருத்துவ சத்திரசிகிச்சை மாணிப் பட்டத்தையும், இப் பட்டமளிப்பு விழாவின்போது பெற்றுக் கொள்ளவுள்ளனர்.

முதற்தடவை:

நாட்டிலேயே முதற்தடவையாக சித்த மருத்துவ சத்திர சிகிட்சை மாணிப்பட்டத்தை யாழ். பல்கலைக்கழகம் நான்கு மாணவர்களுக்கு வழங்கவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பட்டமளிப்பு விழாவையொட்டி நாளை பல்கலைக் கழக இராமநாதன் நுண்கலைக் கழகம் கலை நிகழ்ச்சி ஒன்றினை ஏற்பாடு செய்துள்ளது.

மேலும் திங்கள், செவ்வாய் ஆகிய இரு தினங்களிலும் திருமதி லீலாவதி இராமநாதன், சேர் பொன்னம்பலம் இராமநாதன் ஆகியோரது நினைவுப் பேருரைகள் இடம் பெறவுள்ளது. (ஈ)

# யாழ். வந்த உர வகைகள் ஆகஸ்டிலேயே பங்கீடு

(யாழ்ப்பாணம்)

வடபகுதிக்கென கொண்டு வரப்பட்ட உரவகைகள் எதிர்வரும் ஆகஸ்ட்மாதம் அளவிலேயே மக்களுக்குப் பங்கிடப்படும் என யாழ் அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

இப்பொழுது இந்த உரத்தை சந்தையில் விடும்பொழுது இது சிறப்பு சந்தைக்கு வழிவகுக்கும். இதனால் விதைப்புக் காலத்துக்கு போதிய உரவகைகள் சந்தையில் இருக்காது என்பதால் இந்த உரவகைகளை ஆகஸ்ட் மாதத்தில் சந்தைக்கு கொண்டு வந்து பங்கீட்டு அடிப்படையில் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஏ.ர)

# புகைப்படப் பிடிப்பாளர் சுபாசுந்தரம் கைது

(கொழும்பு)

கொழும்பு கூட்டுப்படைத் தலைமையகத்தில் இடம் பெற்ற குண்டுவெடிப்புக்கு வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சந்திரன் என்பவரே பொறுப்பு ஆவார் என்று புலனாய்வு அதிகாரிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

சென்னையில் புகைப்படப் பிடிப்பாளர் சுபாசுந்தரம் என்பவர் ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக விசாரணை நடத்தி வரும் விசேட புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் செங்கை அண்ணா மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபோது முப்பது நாட்களுக்கு காவலில் வைக்கும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

# சடலம் அடையாளம் காணப்பட்டதாகத் தகவல்

(சென்னை)

தமிழகத்தில் செங்கை அண்ணா மாவட்டத்தில் லட்சுமிபுரம் கிராமத்திற்கு அண்மையில் உள்ள குளத்தினருகே இறந்து கிடந்தவர் யாழ்ப்பாணம் அச்சுவேலியைச் சேர்ந்த முருகமூர்த்தி (வயது 32) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவர் அப்பகுதியில் உள்ள அஞ்சுகம் நகரில் தனது மனைவி நாகேஸ்வரியுடனும் இரு பிள்ளைகளுடனும் வாழ்ந்து வந்தவர் எனவும் புரசைவாக்கத்தில் பிளாஸ்ரிக் உற்பத்தி நிலையம் ஒன்றை நடாத்தி வந்தவரெனவும் பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

இவரது கொலை தொடர்பாக இவரது நண்பரான ஈசனையும் மற்றொரு நபரையும் பொலிசார் தேடிவருகின்றனர்.

## வேலணை தபாலகம் இயங்குகின்றது

(வேலணை)

ஊர்காவற்றுறையில் இராணுவ நடவடிக்கைகளின் காரணமாக இடமாற்றம் செய்யப்பட்டு யாழ்ப்பாணத்தில் இயங்கிவந்த வேலணை தபால் அலுவலகம் சென்ற வாரம் முதல் வேலணையில் இயங்கி வருகின்றது. (14)

## இறுதி ஆட்டத்தில் ஸ்ரெபிக்கிறாவ்

(லண்டன்)

விம்பிள்டன் டென்னிஸ் போட்டியில் பெண்களுக்கான ஒற்றையர் இறுதிப் போட்டியில் ஆர்ஜென்டீனாவைச் சேர்ந்த செபட்ரீனியா (21 வயது), ஜேர்மனியைச் சேர்ந்த ஸ்ரெபிக்கிறாவ் ஆகிய இருவரும் கலந்து கொள்ளத் தகுதி பெற்றுள்ளனர்.

## பரு. அணி வெற்றி

(யாழ் விளையாட்டு நிருபர்)

டொனால் வெற்றிக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி கடந்த சனிக்கிழமை இடம் பெற்ற ஆட்டத்தில் பருத்தித்துறை விளையாட்டுக் கழக அணி மிகவும் பாராட்டக்கூடிய முறையில் விளையாடி வல்வாய்ந்த 'ஷப்றா' விளையாட்டுக் கழக அணியை தோற்கடித்தது. பருத்தித்துறை அணி தனது 46.2 ஓவர்களில் 138 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

'ஷப்றா' அணி தனது ஆட்டத்தில் 28.4 ஓவர்களில் 117 ஓட்டங்களை மாத்திரமே பெற்று 21 ஓட்டங்களால் தோல்வியுற்றது. (42)

## ஆட்சிக்குழுக் கூட்டம்

(கொழும்புத்துறை)

யாழ் மாநகரசபை சனசமூகநிலையங்களின் சமாசத்தின் ஆட்சிக்குழுக் கூட்டம் இன்று 6ஆம் திகதி (6-7-91) சனிக்கிழமை பி. ப. 3-30 மணிக்கு இல 33 பருத்தித்துறை வீதியில் உள்ள சமாசப்பணிமனையில் தலைவர் திரு கோ. சிவராசா தலைமையில் நடைபெறும். (24)

## கலை பண்பாட்டுக்

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாதன் எழுதிய 'விடுதலைக்கான அரங்கு' என்ற தலைப்பிலான சிறுகட்டுரை, பார்வையாளரை உணர்ச்சிவசப்படுத்தாமல் அவர்களில் உறைந்துள்ள படைப்பாற்றலைத் தூண்டிச் செயல் புரியும் மனோநிலைக்கு உயர்த்தவல்ல ஒரு அரங்கு பற்றிப் பேசுகிறது. அத்தகைய அரங்கு ஒடுக்கப்பட்ட மக்களின் வெளிப்பாட்டு ஆற்றலை அதிகரிக்கும் என அவர் குறிப்பிடுகிறார்.

''அலைகளில் மறைந்த உண்மைகள்'' என்ற தலைப்பில் 'மைதிலி' எழுதிய கட்டுரையில் தமிழரின் கலைப்பாரம்பரியத்தில் சங்ககாலத்துக்குப் பின் பெண் கலைஞர்கள் எய்திய பாதிப்புக்கள் தொட்டுக் காட்டப்பட்டுள்ளன. கலைத்திறன் மிக்க சிலப்பதிகாரத்து மாதவி கோவலனுக்குப் போகப் பொருளான நிலையும் பிற்காலத்தில் தேவதாசி என்ற குலம் உருவான வரலாறும், யாழ்ப்பாணத்தில் பெண்களின் சதிர்க் கச்சேரி 'சின்னமேளம்' என இழிவாகக் கருதப்பட்டமையும் இன்ன பிறவும் பெண்களின் கலைத்துறை ஈடுபாட்டை ஒடுக்கும் வகையில் அமைந்த சமூக வரலாற்றுச் செல்நெறியை உணர்த்துவன என்பது மேற்படி கட்டுரையின் தொனிப் பொருள். இந்நிலை மாற வேண்டும் என்பதோடு மேற்படி வரலாற்றுச் செல்நெறிக்கான காரணங்கள் ஆராயப்பட வேண்டும் என்ற கருத்தையும் முன்வைத்து இக் கட்டுரை நிறைவடைகிறது.

கலாநிதி சோ. கிருஷ்ணராஜா எழுதியுள்ள ''கலை வெளிப்பாடு'' என்ற சிறு கட்டுரை கலையனுபவம் என்பது உணர்ச்சித்துலங்கல் என்ற வகையில் நிலவும் கருத்து நிலையை மறுத்து அது ஒரு அறிக்கையனுபவமாகும் என்ற கருத்தை முன்வைப்பது.

நீ மரியசேவியர் அடிகளின் 'பொதுமை பேணுமின்' என்ற கட்டுரை தமிழர் பாரம்பரியத்திற் காணப்படும் பொதுமைக் கூறுகளைத் தொகுத்து நோக்குகிறது.

மேற் கட்டப்பட்ட வரலாறு, கலை இலக்கியம் என்பன தொடர்பான கட்டுரைகளுக்குப் புறம்பாகத் தமிழீழத்தின் பொருளியல் சார் வளங்களிலொன்றான கனிவளம் தொடர்பாக ஒரு கட்டுரை அமைந்துள்ளது. திரு. வி. பி. சிவநாதன் எழுதிய ''கனிவள அடிப்படைக் கைத்தொழிலுக்கான வாய்ப்பும் வசதியும்'' என்ற ஆக்கமே அது. இதிலே தமிழீழத்தின் பல்வேறு பிரதேசங்களின் கனிவளங்கள் பற்றிய விபரமும் அவை தமிழீழத்தின் கன்னிறைவுக்கு எவ்வெவ் வகைகளிற் பயன்படலாம் என்பதும் தரப்பட்டுள்ளது. (தொடரும்)

## விளையாட்டுப் போட்டி

பாலர் கல்விக்கழகம் நிர்வகிக்கும் 14 பாடசாலைகளுக்கிடையிலான 20 ஆவது வருடாந்த விளையாட்டுப்போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை (7-7-91) பிற்பகல் 2-00மணிக்கு யாழ் வைத்தீஸ்வர வித்தியாலய விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

# வி.பு.ம.முன்னணி நடத்தும் மாவீரர்தினம் போட்டிகள்

21-11-91 தொடக்கம் 27-11-91 வரையில் நடைபெற இருக்கும் மாவீரர் தினத்தை ஒட்டி நடாத்தப்பட இருக்கும் கலை கலாசாரப் போட்டிகளின் எழுத்தாளர்கள் கலைஞர்கள் மற்றும் இத்துறையில் ஆர்வம் மிக்கோர் மாணவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளும் படி விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி மக்கள் உறவு கொள்கை முன்னெடுப்புப் பிரிவு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இப் போட்டிகள் கீழ்காணும் விடயங்களில் நடைபெற உள்ளன.

1. கட்டுரை 2. நாவல் 3. சிறுகதை
4. கவிதை 5 சுவரொட்டி

இவற்றை ஆக்க விரும்புவோர் ஆக்கங்களை 25-10-91 க்கு முன்பு எமது பிரதேச மாவட்ட காரியாலயங்களிலும் அல்லது பத்திரிகை காரியாலயங்களில் ஒப்படைக்கும் படி வேண்டுகின்றோம்.

★ போட்டிகள் அனைத்தும் மாணவர்களுக்கு வேறாகவும் மற்றையோருக்கு வேறாகவும் இரு பிரிவுகளாக நடைபெறும்.

★ தமிழீழத்தின் அதியுயர் கௌரவமிக்க பரிசுகள் வழங்கப்படவுள்ள இப்போட்டிகளில் ஆர்வம் ஆற்றல் மிக்க அனைவரும் கலந்து கொள்ளலாம்.

★ போட்டிகளுக்கான விதிமுறைகள்.

தமிழீழ மக்கள் அனைவரும் கலந்து கொள்ளக்கூடிய இப் போட்டிகளின் படைப்புக்கள் யாவும் தமிழீழ விடுதலைப் போரை அடிப்படையாக கொண்டும் அதனை முன்னெடுத்துச் செல்லும் கருத்துக்கள் செறிந்ததாகவும் சமகாலத்தில் எமது மக்களின் பிரச்சினையை அடிப்படையாகக் கொண்ட யதார்த்த தன்மை மிக்கதாகவும் இருத்தல் அவசியம். மண் மீட்புப் போரில் இன்னுயிர் ஈந்த மாவீரர்களின் உணர்வுகளையும் இலட்சியத்தையும் பிரதிபலிக்கக் கூடியதாகவும் இருக்கவேண்டும். அதே போல் சுவரொட்டிகளின் கருப்பொருள்கள் மேற்குறிப்பிட்ட தன்மை மிக்கதாகவே இருத்தல் நன்று இலக்கியப் படைப்புக்கள் தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் தெளிவாக எழுதப்பட்டோ அல்லது தட்டச்சு செய்யப்பட்டோ ஒவ்வொரு படைப்பிலும் மூன்று பிரதிகள் அனுப்பப்படவேண்டும்.

சிறுகதைகள் 10 பக்கங்களுக்கு மேற்படாததாகவும் நாவல்கள் 100 பக்கங்களுக்கு குறையாமலும் கவிதைகள் 60 வரிகளுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். சுவரொட்டிகள் யாவும் ஆட்போட்டில் 60 சென்றி மீற்றர் X 40 சென்றி மீற்றர் அளவு கொண்டதாக வண்ணப்படங்களாகவோ (எந்த வண்ணமும் உபயோகிக்கலாம்) கறுப்பு வெள்ளைப் படங்களாகவோ வரைந்து அனுப்பலாம்.

போட்டியில் பங்கு பற்றும் மாணவர்களது படைப்புக்களை அவர்களது பாடசாலை அதிபர்களால் அல்லது வகுப்பு ஆசிரியர்களால் அவர்களுடைய சொந்தப் படைப்பு என உறுதிப்படுத்தப்பட வேண்டும். போட்டிக்கான கட்டுரைகள் 3000-5000 சொற்களுக்கு மேற்படாமல் இருத்தல் நன்று. போட்டிகளின் தீர்ப்பு தகுதி வாய்ந்த நடுவர் குழுவினரால் எடுக்கப்படும் நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

**மாணவர்களே! போட்டிகள் பற்றிய சிறப்பு விதிகள்**

மாணவர்களுக்கான போட்டிகள் சிறுகதை, கவிதை, கட்டுரை, ஓவியம், ஆகிய விடயங்களில் நடைபெறும். இவை மேலே குறிப்பிட்ட தன்மைகளைக் கொண்டதாக இருக்கும். ஓவியங்கள் 18 X 12 அளவு கொண்டதாக இருக்கவேண்டும். கட்டுரைகள் கீழ் வரும் அம்சங்களைக் கொண்டதாக இருக்க வேண்டும்.

1. விடுதலைப் போராட்டமும் மாணவர் பங்களிப்பும்
2. தமிழீழத்தின் பொருளாதார அபிவிருத்தி
3. தமிழீழ மாணவர்களது கல்வியின் எதிர்காலம்
4 இன்றைய சூழ் நிலையில் மாணவர்களது சமூகப்பணிகள்
5 போராடுவதற்காகக் கற்போம்

மேற்கண்ட தலைப்புக்களில் கட்டுரைகள் 2500 சொற்களுக்கு மேற்படாமல் வரைய வேண்டும். மாணவர்களுக்கான போட்டிகள் யாவும் கீழ் பிரிவு, மத்திய பிரிவு, மேல் பிரிவு ஆகிய பிரிவுகளாக நடைபெறும்

1. 15 வயதுக்கு உட்பட்டோர் கீழ் பிரிவு
2. 15 — 17 க்கு இடைப்பட்டோர் மத்திய பிரிவு
3. 17 க்கு மேற்பட்டோர் மேற் பிரிவு

ஒவ்வொரு பிரிவினருக்கும் தனித்தனியாக பரிசுகள் வழங்கப்படும்.

# புலிகளின் நடவடிக்கைக்கு விரைவில் சாவுமணி

(கொழும்பு)

சிறிலங்காவின் அமைதிக்கும் சமாதானத்திற்கும் பங்கம் ஏற்படுத்தும் வகையில் வடக்கு கிழக்குப் பகுதிகளில் தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்தி வரும் நடவடிக்கைகளுக்கு விரைவில் சாவுமணி அடிக்கப்படும் என்று சிறிலங்கா பிரதமர் டி. பி விஜயதுங்கா தெரிவித்துள்ளார்

நேற்று முன்தினம் கம்புறுப்பிட்டியில் கம்உதாவ கிராம எழுச்சி இறுதி நாள் வைபவத்தில் கலந்துகொண்டு பேசிய டி. வி. விஜயதுங்க இதனைத் தெரிவித்தார்.

## பெற்றுக் கொள்ளவும்

பருத்தித்துறையைச் சேர்ந்த 553453348 V இலக்கமுடைய வல்லிபுரம் கருணாமூர்த்தி என்பவருடைய அடையாள அட்டை கலைச்செல்வி என்பவரால் கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர்கள் ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.

## புதுவை அமைச்சரவை பதவி ஏற்பு

(சென்னை)

புதுச்சேரியில் ஆறு உறுப்பினர் இந்திரா காங்கிரஸ் அமைச்சரவை வி. வைத்தியலிங்கம் தலைமையில்நேற்று முன்தினம் பதவியேற்றது

யூனியன் பிரதேசத்தின் துணைநிலை ஆளுநர் ஹர்வரூப் சிங் புதிய அமைச்சர்களுக்கு பதவிப் பிரமாணமும், ரகசிய காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார்.

### சிந்தனைக்கு

முன்னேற்றத்திலும், வளர்ச்சியிலும், தடங்கலை அனுமதிப்பதில்லை இயற்கை.

— யோஹன் கெத்தே


# ஈழநாதம்

81, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம். 06.07.1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
தபெ.எண் 05


## கேள்விக்குரிய 'கொர்பி' எதிர்காலம்

சோவியத் யூனியனின் முன்னாள் வெளிவிவகார அமைச்சரும், சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் பிரமுகர்கள் எட்டுப் பேரும் இணைந்து புதிய அரசியல் இயக்கம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர். கம்யூனிஸ்ட் கட்சியில் உள்ள தாராண்மைவாதிகள் இவ் அரசியல் இயக்கத்தில் சேருவார்கள் என இவர்கள் எதிர்பார்க்கிறனர். இவர்கள் தாம் கொடுக்கும் நெருக்கடியின் மூலம் ரஷ்ய ஜனாதிபதி கொர்பசேவ் கம்யூனிஸ்ட் கட்சியின் பொறுப்பில் (செயலாளர்) இருந்து விலகுவார் என எண்ணுகின்றார்கள்.

சோவியத்யூனியனின் ஜனாதிபதி கொர்பசேவ் இன்று எதிர்கொள்ளும் அரசியல் நெருக்கடி இது மட்டுமல்ல. சோவியத் யூனியனில் இருந்து பிரிந்து செல்வதாக ஐந்து குடியரசுகள் சுதந்திரப் பிரகடனம் செய்துள்ளன. அதற்கு அக்குடியரசு மக்களின் பலமான ஆதரவும் கிடைத்துள்ளது. இது சோவியத் யூனியனின் ஒருமைப்பாட்டிற்கே அச்சுறுத்தலாகவுள்ளது.

அதேவேளை ரஷ்யக் குடியரசின் ஜனாதிபதித் தேர்தலிலும் தீவிர ஜனநாயக சீர்திருத்தங்களைக் கோரும் யெல்ஸ்டின் வெற்றிபெற்றுள்ளார். இதன்மூலம் சோவியத் குடித்தொகையின் அரைப்பங்கிற்கு மேற்பட்ட மக்களைக் கொண்ட குடியரசிற்கு மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியாக யெல்ஸ்டின் விளங்குகின்றார். இதன் மூலம் மேற்குலகில் கொர்பசேவின் புகழ் பெரிதாகப் பாதிக்கப்பட்டுள்ளது. மேற்குலகம் சோவியத் யூனியனின் தலைவராக முன்னர் கொர்பசேவிற்கு வழங்கிய அங்கீகாரத்தைத் தொடர்ந்து வழங்க முடியுமா எனக் கேள்வி எழுப்பியுள்ளன.

அதேவேளை எட்வேட் செவர்னாட்சேயினதும் அவரது கூட்டாளிகளினதும் அரசியல் இயக்கம் கம்யூனிஸ்ட் கட்சிக்குள்ளும் பெரும் நெருக்கடிகளைத் தோற்றுவித்துள்ளன. எட்வேட்செவனாட்சே கம்யூனிஸ்ட் கட்சிக்குள் தீவிரமானசீர் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என்ற சிந்தனை கொண்டவர். சோவியத்தின் வெளிபுறவுக் கொள்கையை முற்றாக மாற்றி அமைத்து மேற்குலகத்துடன் நட்புறவை விருத்திசெய்வதில் தீவிரபங்காற்றியவர் ஆப்கானிஸ்தானில் இருந்து சோவியத் ராணுவ வெளியேற்றத்திற்கும் அமெரிக்க-சோவியத் படைக்குறைப்பு, அணுவாயுத கட்டுப்பாடு உடன்படிக்கை போன்றவற்றை செய்துகொள்வதற்கும் முக்கிய காரணமாகவிருந்தவர். இத்தகைய செவர்னாட்சே புதிய அரசியல் இயக்கம் அமைத்திருப்பது சோவியத் கம்யூனிஸ்ட் கட்சிக்குள் பிளவை ஏற்படுத்தி கொர்பசேவிற்கு பலத்த நெருக்கடியைத் தோற்றுவிக்க ஏதுவாக இருக்கும் என்பதில் சந்தேகப்படத் தேவையில்லை.

ஏனெனில் யெல்ஸ்டினுக்கு ரஷ்யக் குடியரசுத் தேர்தலில் கிடைத்த அமோக வெற்றியும், கம்யூனிஸ்ட் கட்சிக்குக் கிடைத்த படுதோல்வியும் மக்கள் சோவியத் யூனியனில் சீர்திருத்தங்களையும் மாற்றங்கள் நிகழ்வதையும் எதிர்பார்த்து நிற்கின்றனர் என்பதை எடுத்துக் காட்டுகின்றன.

அதேவேளை கொர்பசேவ் முதலாளித்துவத்தின் பக்கம் முழுமையாகச் சாய்ந்துவிட்டார் கம்யூனிசத்தை விற்றுவிட்டார் என்று கம்யூனிசத் தீவிரவாதிகளின் குற்றச்சாட்டுகளும் எழுந்துள்ளன. எட்வேட் செவர்னாட்சே வெளிவிவகார அமைச்சுப் பதவியிலிருந்து பதவி விலகியதற்கு இத்தீவிரவாதிகளின் பலத்த எதிர்ப்பே காரணமாகும்.

இந்நிலையில், சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் எதிர்காலமும் கொர்பசேவின் எதிர்காலமும் கேள்விக்குரியதாகவே உள்ளது. கொர்பசேவ் சீர்திருத்தங்களைத் தொடர முடியாமலும் பழைய நிலைக்குத் திரும்ப முடியாமலும் சிக்கலில் மாட்டிக்கொண்டுள்ளார். இதனைநோக்கும் போது கொர்பசேவ் தான் ஆரம்பித்துவைத்த அரசியல் சீர்திருத்தங்களுக்கு தானே பலியாவது தவிர்க்க முடியாதது போன்றே தெரிகிறது.

## எமது திட்டங்களுக்கு அரசின் பதில் இல்லை
### -மாணிக்கவாசகர்

(யாழ்ப்பாணம்)

கடந்த மாதம் அரச அதிபர்களுக்கிடையிலான மாநாட்டில் கொடுக்கப்பட்ட திட்டங்கள் அமுல்படுத்துவது அரச தரப்பிலிருந்து கிடைக்கும் பதிலைப் பொறுத்தே கூறமுடியும் எனவும் இதுவரை எந்த ஒரு பதிலும் எமக்குக் கிடைக்கவில்லை என யாழ். அரச அதிபர் மாணிக்கவாசகர் கூறிவிட்டார்.

பருத்தித்துறை இறங்கு துறையை புனரமைப்பு செய்வது குறித்தும் மீளவும் பேருந்து சேவையை ஆரம்பிப்பதோ அன்றி அதற்கான எரிபொருளை கொண்டு வருவதற்கு சம்மதம் பெற்றுக் கொள்வது குறித்தோ புதிய சப்பல் ஒன்றின் மூலம் வெளிச் சந்தைக்கான உணவுப் பொருள்களைகொண்டு வருவதுகுறித்தோ எந்த ஒரு முடிவும் இதுவரை தம்மை வந்தடையவில்லை எனவும் அவர் கூறி உள்ளார்.

மேலும் இவற்றில் ஒரு சில விடயங்கள் குறித்து சாவகச்சேரி பொதுஸ்தாபனம் ஒன்றின் உதவியுடன் இதற்கான தொடர்புகளை தாம் மேற்கொண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (லோ)

## பதவியுயர்வு பரீட்சை

(கொழும்புத்துறை)

மதுவரித் திணைக்கள மதுவரிப் பரிசோதகர் பதவி உயர்வு பரீட்சைக்கு ஏற்கனவே விண்ணப்பித்தவர்களுக்கு இன்று சனிக்கிழமை காலை 9.00மணிக்கு மதுவரித் திணைக்கள கொழும்பு தலைமையகத்தில் பரீட்சைநடைபெறவுள்ளதாகக் கொழும்பு மதுவரித்திணைக்கள ஆணையாளர் சுற்று நிருப மூலம் தெரிவித்துள்ளார். (24)

### சிறிலங்கா

## வெளியுறவு அமைச்சர் இந்தியா செல்கிறார்

(கொழும்பு)

சிறிலங்காவின் வெளியுறவுத் துறை அமைச்சர் ஹரால்ட் ஹெரத் இந்மாத இறுதிக்குள் இந்தியாவிற்கு செல்லவுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் மாதவ்சிங்சோலங்கிக்கும் ஹரால்ட் ஹெரத்திற்கும் இடையில் மாலைதீவில் நடந்த பேச்சுவார்த்தைக்குப் பின்னர் இந்தியாவிற்கு செல்ல விரும்புவதாக அறிவிக்கப்பட்டது. இந்திய பயணத்தின் போது ஹெரத் இந்திய - இலங்கை கூட்டு கமிசன் ஒப்பந்தங்களில் கையொப்பமிடுவார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## குர்தா அணிந்த நபர் 2ஆம் மட்டத்தலைவராம்

(கொழும்பு)

ராஜீவ் காந்தி கொலையில் சம்பந்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் குர்தா அணிந்த நபர் விடுதலைப் புலிகளின் இரண்டாவது மட்டத் தலைவர் என்றும், இந்தியப் படையினர் இங்கு இருந்த போது பிடிபடாமல் தப்பியிருந்தவர் என்றும், கொழும்பிலுள்ள தமிழ்க் குழுவொன்று கூறியுள்ளது.

### காவிரி நதி தொடர்பான

## தமிழகத்தின் கோரிக்கை கர்நாடகா நிராகரிப்பு

(பெங்களூர்)

தமிழகத்திற்கு கர்நாடகத்தில் இருந்து காவிரியை உடனடியாக திறந்து விட வேண்டும் என்ற தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவின் கோரிக்கையை கர்நாடக மாநில முதலமைச்சர் பங்காரப்பா நிராகரித்துள்ளார்.

தண்ணீர் திறந்து விடவேண்டும் என்ற காவிரி நதி நீர் நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பிற்கு தமது அரசாங்கம் உடன் படவேண்டியது இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இடைக்காலத் தீர்ப்பின் சட்ட அம்சங்கள் பற்றி தமது அரசு பரிசீலனை செய்து வரும் போது பிரச்சினையை பெரிதுபடுத்தும் நடவடிக்கைகளை மத்திய அரசு எடுக்கக் கூடாது என்றும் அவர் தெரிவித்தார்.

இது சம்பந்தமாக பிரதமரையும், சட்ட அமைச்சரையும் புதுடில்லியில் ஏற்கனவே சந்தித்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## ஏலத்தில் பைபிளின் முதலாவது பதிப்பு

(லண்டன்)

உலகில் முதலாவதாகப் பிரசுரிக்கப்பட்ட பைபிள்களில் ஒன்று இவ் வாண்டு ஏல விற்பனைக்கு வர விருப்பதாகவும் இது 16 லட்சம் டொலருக்கு (ஆறு கோடி 40 லட்சம் ரூபா) விலைபோகும் எனவும் தெரிவிக்கப்படுகிறது

புராதன லத்தீன் மொழியில் 530 ஆண்டுகளுக்கு முன் இந்த பைபிள் பல்வரிய வில் பிரசுரிக்கப்பட்டது பிரசுரிக்கப்பட்ட மொத்தம் 14 பைபிள்களில் இது ஒன்றே இன்னும் விற்பனை செய்யப்படாமல் உள்ளது.

## கடதாசிக் கூட்டுத்தாபனம் மக்கள் மயப்படும்

(வாழைச்சேனை)

இலங்கையில் கூட்டுத்தாபனங்களை மக்கள் மயப்படுத்துவது என்ற திட்டத்தின் கீழ் தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனமும் மக்கள் மயப்படுத்தப் படவுள்ளது.

இதன்மூலம் இதன் தற்போதைய மூலதனம் முழுவதும் உடன் திறைசேரிக்கு சொந்தமாக்கப்படுவதுடன் அவை பின்னர் பங்கு மூலதனமாக்கப்படவுள்ளது. இதனால் தற்போது நடைமுறையிலிருக்கும் எல்லா நன்மைகளையும் படிகளையும் உதவித் தொகைகளையும் ஊழியர்கள் தொடர்ந்து அனுபவித்து வருவர். இதன் குறிப்பிட்டளவு பங்குகள் தனியார் முதலீட்டாளர்களுக்கும் ஏனைய பங்குகள் சேவை மூப்பின் அடிப்படையில் ஊழியர்களுக்கும் வழங்கப்படும் என தேசிய கடதாசி ஆலைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

## திரைப்படப்பாடல் மத்தியில் வெடிகுண்டு அறிவிப்பு

(திருவனந்தபுரம்)

திருவனந்தபுரம் வானொலி நிலையத்திலிருந்து திரைப் படப் பாடல்கள் நிகழ்ச்சிக்கு நடுவே திடீரென வெடிகுண்டு பற்றிய எச்சரிக்கை ஒலிபரப்பானது.

திருவனந்தபுரம் வானொலியில் மலையாளத்திரைப்படப் பாடல்கள் ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது அப்போது செய்திப் பகுதியில் இந்த வானொலி ஒலிபரப்பைக் கேட்டவர்களுக்கு ஒரு மர்மக் குரல் கேட்டது. எர்ணாகுளம் ஆட்சியர் அலுவலகத்திற்கு அருகிலுள்ள இரண்டு மாடிக் கட்டட மொன்றில் சக்திவாய்ந்த வெடிகுண்டு வைக்கப்பட்டுள்ளது. இன்னும் 48 மணிநேரத்தில் வெடிக்கவுள்ள இக்குண்டினால் சுமார் 20கிலோ மீற்றர் சுற்றளவுள்ள பகுதி பாதிக்கப்படும் என்ற இந்த மர்மக்குரல் எச்சரித்தது விடுதலைப் புலிகளின் பிரதிநிதி என்று இந்த மர்மக் குரல் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டது.

வெடிகுண்டு பற்றிய பயத்தில் இருக்கும் மக்களைப் பயமுறுத்த யாரோ செய்த சதியே இது என்று மாவட்ட பொலிஸ் கமிஷனர் கூறியுள்ளார்.

## ஜூலை 11 இல் சூரியகிரஹணம்

(கொழும்பு)

பூரண சூரிய கிரஹணம் ஜூலை 11-ல் இடம் பெறும் என்று கொழும்பு வளிமண்டல அவதான நிலையம் அறிவித்துள்ளது. ஆனால் இலங்கையில் கிரஹணத்தை அவதானிக்க முடியாது. மத்திய அமெரிக்கா முதல் பிரேசில் வரை, 2 மணி 25 நிமிடங்களுக்கு இருள் கவ்வியிருக்கும்.

இலங்கைநேரப்படி இலங்கையில் சூரியகிரஹணம் பிற்பகல் 9.58 க்கு ஆரம்பமாகி ஜூலை 12-ம் திகதி அதிகாலையும் காலையும் இலங்கையில் பி.ப 10-53 முதல் அதிகாலை 2.18 வரை சம்பூரண இருள் பரவியிருக்கும்.

240 கி.மீ விட்டமுள்ள சந்திரனின் நிழல் சூரியனின் கதிர்களை ஊடறுத்து ஹவாயிலுள்ள மௌனாகே மலையைக் கடந்து செல்லும் இம் மலை உச்சியில் சக்தி வாய்ந்த நவீன டெலஸ்கோப்புகள் பொருத்தப்பட்டுள்ளன.

## புத்தூக்க பயிற்சி அமர்வு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி நிர்வாகச் செயலகம் தமிழீழ ஆய்வு நிறுவனம், தெங்குபனம் பொருள் கூட்டுறவுச் சமாசங்களின் சமாசம் ஆகியோர்களால் புத்தூக்க பயிற்சி நெறி ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இம்மாதம் 6ஆம் திகதியிலிருந்து 7ஆம் திகதிவரை வலிகாமம் கோட்டம் மானிப்பாய் மெமோறியல் கல்லூரியிலும் 13ஆம், 14ஆம் திகதிவரை வடமராட்சிக் கோட்டம் நெல்லியடி ம.ம வித்தியாலயத்திலும், 20ஆம், 21ஆம் திகதிவரை தென்மராட்சிக் கோட்டம் சாவகச்சேரி றிபேக் கல்லூரியிலும், 27ஆம், 28ஆம் திகதிவரை யாழ். தீவகக் கோட்டம் யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரம் ம.ம. வித்தியாலயத்திலும் அடுத்தமாதம் (ஆவணி 3ஆம், 4ஆம் திகதி வரை முல்லைத்தீவு மாவட்டம் யாழ்ப்பாணம் கனகரத்தினம் ம.ம வித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளன.

# சிறிலங்கா கடற்படை ஆயுதக்கொள்வனவில் மோசடி

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா கடற்படையினரின் ஆயுதக் கொள்வனவில் மோசடி நடந்திருப்பதாகவும், இம்மோசடியை விசாரணை செய்யும்படி சிறிலங்கா கணக்காய்வுத் திணைக்களம் பாதுகாப்பு அமைச்சைக் கோரியுள்ளது.

கடற்படையினருக்குத் தேவையான பல்வகை ஆயுதங்களைக் கொள்வனவு செய்வது தொடர்பாக ஆரம்பத்தில் ஆலோசனை மேற்கொண்டு சீனாவிடமிருந்து கொள்வனவு செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டஅதேநேரம் பாகிஸ்தான் தயாரிப்பு ஆயுதங்கள் தமது பாவனைக்கு ஒவ்வாதவை என்றும், அவை தமது பீரங்கிப் படகுகளை அதிர வைக்கின்றன என்றும் கடற்படை உயர் அதிகாரிகளால் நிராகரிக்கப்பட்டன.

ஆனால் இறுதி நேரத்தில் கடற்படை அதிகாரிகள் மட்டத்தில் மோசடிகள் இடம் பெற்றதாகவும், இம்மோசடிகளின் விளைவாக முன்னர் நிராகரித்த பாகிஸ்தான் நாட்டுத் தயாரிப்பு ஆயுதங்களைக் கொள்வனவு செய்துகொண்டனர். இவ்வாயுதக் கொள்வனவில் பெரியளவிலான மோசடி நடைபெற்றிருப்பதைக் கணக்காய்வுத் திணைக்களம் உறுதி செய்துள்ளது; இம்மோசடி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும்படி பாதுகாப்பு அமைச்சிடம் மேற்படி திணைக்களம் கோரியுள்ளது. (க)

# சட்டசபை செல்வதற்கு பண்ருட்டிக்குத் தடை

(சென்னை)

தமிழ்நாடு சட்டப் பேரவையில் மூன்று நாட்களுக்கு பண்ருட்டி ராமச்சந்திரனும், ஆர். தாமரைக்கனியும் கலந்து கொள்ளக்கூடாது என்று தடை விதிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சட்டப்பேரவையில் நேற்று முன்தினம் பண்ருட்டி ராமச்சந்திரன் தாக்கப்பட்டது தொடர்பாக, சுயேட்சை உறுப்பினர் ஆர். தாமரைக்கனியும், பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர் பண்ருட்டி ராமச்சந்திரனும் மூன்று நாட்களுக்குச் சபை நடவடிக்கைகளில் கலந்து கொள்ளக்கூடாது என்று சபையின் தலைவர் சேடபட்டி முத்தையா நேற்றுத் தீர்ப்பளித்தார்.

பேரவைத் தலைவர் தனது தீர்ப்பில் ஆளுநர் உரையில் பண்ருட்டி ராமச்சந்திரன் குறுக்கீடு செய்ததும், தாமரைக்கனி விரும்பத்தகாத வகையில் ராமச்சந்திரன் மீது ஒலிக் கட்டியதும் பேரவை விதிகளுக்கு முரண்பாடானது என்றும், அவை தண்டனைக்குரிய செயல்களாகும் எனவும் தெரிவித்தார்.

இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்ட போது சம்பந்தப்பட்ட இருவரும் அவையில் இல்லை.

பேரவைத் தலைவர் தீர்ப்பு வழங்கியபோது, திருநாவுக்கரசு தீர்ப்பை ஆட்சேபிக்கும் வகையில் தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தார். அவரது பேச்சு சட்டப் பேரவைக் குறிப்பேட்டில் இடம் பெறவில்லை.

பின்பு ராஜீவ் காந்தியின் மறைவு குறித்து அனுதாபத் தீர்மானத்தில் பேசிய பிறகு, அண்ணா புரட்சிக்கழக தமிழக முன்னேற்றக் கட்சித் தலைவர் திருநாவுக்கரசு வெளிநடப்புச் செய்தார். அனுதாபத் தீர்மானத்தில் பேசும் போது திருநாவுக்கரசு பாவித்த சில சொற்றொடர்களை அவைத் தலைவர் குறிப்பேட்டில் இருந்து நீக்கினார்.

# பணத்திற்காக ராஜீவ் கொலை செய்யப்படவில்லை

(சென்னை)

தமிழ் நாட்டில் இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியை கொலை செய்தவர் தாணு என்னும் பெண்மணியே என்றும், இவர் தமிழீழ இயக்கத்தைச் சேர்ந்தவர் என்றும் விசாரணையில் ஈடுபட்டுவரும் அதிகாரிகள் கூறியிருப்பதாக பி.ரி.ஐ செய்தி வெளியிட்டுள்ளது.

தாணு இக்கொலையை பணத்துக்காக நடத்தவில்லையென்றும் இந்தியப் படை இலங்கையில் இருந்த போது இந்திய இராணுவத்தினரால் பாதிக்கப்பட்டமைக்குப் பழி வாங்கும் முகமாக இத் தாக்குதலில் ஈடுபடப் போவதாக முன்பு தமக்கு நெருக்கமானவர்களிடம் தாணு கூறினாரெனவும் அதிகார பூர்வ வட்டாரங்கள் கூறியுள்ளன. தாணு இத்தக் குண்டு வெடிப்பில் உயிர் துறப்பேன் எனத் தெரிந்த பின்பும், தாணுவே இப் படுகொலையை நடத்தினார் என்றும் பி.ரி.ஐ. செய்தி கூறுகிறது. ராஜீவின் கொலையை ஆராய்ந்துவரும் எஸ்.ஐ.ரி. என்னும் குழு முதன் முதலாக தாணு என்னும் பெண், விடுதலைப் புலி இயக்கப் போராளி எனக் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட எட்டுப்பேரில் மூவர் விடுதலைப் புலி இயக்கப் போராளிகள் என்றும் மற்ற ஐவரும் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் என்றும் கூறப்படுகிறது.

# கைதானவர்களில் மூவர் விடுதலைப் புலிகளாம்

(டில்லி)

ராஜீவ் காந்தி மரணம் தொடர்பாக கைது செய்யப்பட்ட எட்டுப் பேரில் மூன்று பேர் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என இந்திய மத்திய புலனாய்வுத் துறையினர் தெரிவித்துள்ளனர் என பி.ரி.ஐ தெரிவித்துள்ளது

ஏனையவர்கள் இந்தியத் தமிழர்கள் என்றும், தமிழீழ விடுதலைப் புலிகளின் அனுதாபிகள் என்றும் மத்திய புலனாய்வுத் துறை தெரிவித்துள்ளது.

**இராணுவம்**

ளவில் இடம்பெற்றுள்ளது, அன்றையதினம் குப்புறப்பிட்டி, குச்சவெளி, சலப்பையாறு ஆகிய இடங்களில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினரே இத் தேடுதல் வேட்டையை மேற்கொண்டுள்ளனர் இம்மோதல் சம்பவத்தில் இராணுவத்தரப்பில் பலத்த சேதமேற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்ட போதிலும் சேத எண்ணிக்கை விபரம் இதுவரை கிடைக்கவில்லை.

**2 தமிழர்**

றுள்ளது, அன்றைய தினம் தோப்பூரில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் சூடைக்குடா, கூனித்தீவு ஆகிய இடங்களைச் சுற்றிவளைத்து சூடைக் குடாவைச் சேர்ந்த இரு வேலயுதம் பஞ்சாட்சரம், இரு. வைரமுத்து விஸ்வலிங்கம் ஆகிய இருவரையும் சுட்டுக்கொன்றுள்ளனர்.

அத்துடன் சூடைக் குடாவைச் சேர்ந்த வேலுப்பிள்ளைபுவி (வயது 16) என்ற மாணவனைக் கடுமையான சித்திரவதைக்குள்ளாகிய பின் விடுதலை செய்துள்ளதாகவும் தெரியவருகிறது.

**தமிழகத்தில்**

சம்பவங்கள் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது;

வட ஆற்காடு, அம்பேத்கார், தென் ஆர்க்காடு, செங்கையண்ணா, திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் வன்முறைச் சம்பவங்கள் இடம் பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

**புலிகளின்**

இந்த லொறியில் நடுவே வெறுமையான இடம் விடப்பட்டு இருந்தது. இதில் வைத்தே யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு வெடி மருந்துகள் கொண்டுவரப்பட்டதாக விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதாம். அந்த வெற்றிடம் கண்டுபிடிக்க முடியாத வகையில் மிகவும் தந்திரமாக உருவாக்கப் பட்டிருந்தது. இந்த வெற்றிடத்தில் வைத்தே விடுதலைப் புலிகள் குண்டுத் தாக்குதல் படையினரும் கொழும்புக்கு கொண்டு வரப்பட்டிருக்கலாம் எனச் சிறிலங்காப் பொலிசார் தெரிவிக்கின்றனர்.

அந்த லொறியின் சொந்தக்காரன கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் கைதுசெய்யப்பட்டுள்ளார். கடந்த புதன்கிழமை இரவு சயனைட் அருந்தி தற்கொலை செய்துகொண்டவரதனே கூட்டுப்படைத் தலைமையக குண்டு வெடிப்புக்கும் முன்னாள் கைத்தொழில் பெருந்தோட்ட தொழில் துறை அமைச்சரும், பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான திரு ரஞ்சன் விஜேரத்தினாவின் கொலைக்கு காரணமான குண்டுவெடிப்புக்கும் திட்டமிட்ட சூத்திரதாரியென சந்தேகிப்பதற்கான தெளிவான சாட்சிகள் புலனாய்வுத் துறை துப்பறியும் நிபுணர்களுக்கு கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது,

**சமூகம் தரசுதவருக்காக**

திறைசேரி சுற்றறிக்கை எவ்.ஐ.என் 293 மூலம் திறைசேரி செயலாளர் சகல அமைச்சர்களின் செயலாளர்களுக்கும், திணைக்களத் தலைவர்களுக்கும் அறிவித்துள்ளார்.

கேள்விப்பத்திரச்சபை உறுப்பினர் ஒருவர் நாட்டிற்கு வெளியே இருந்தாலோ, சுகவீனத்தாலோ கூட்டத்துக்குச் சமூகமளிக்காவிட்டால் இது பற்றி கேள்விப்பத்திரச்சபைத் தலைவர் அமைச்சரவைச் செயலாளருக்கு அறிவித்தால், அந்த உறுப்பினருக்குப் பதிலாகப் புதியஉறுப்பினரை அமைச்சரவைச் செயலாளர் நியமிக்க வேண்டும்.

தொழில்நுட்ப மதிப்பீட்டுக் கமிட்டித் தொடர்பில் மேற் கூறியவாறு உறுப்பினர் சமூகமளிக்க இயலாதுள்ளபோது கமிட்டி உறுப்பினர் ஒருவருக்குப் பதிலாக வேறு ஓர் அலுவலரை பொதுத் திறைசேரியின் நிதிப்பணிப்பாளர் ஒருவரை நியமிக்கலாம்.

**பாராளுமன்றத்துக்கு**

மதிக்கப்படுவார்.

பாராளுமன்றவளாகத்தைச் சுற்றிப் பாதுகாப்பு வலயம் ஏற்படுத்தப்பட்டுள்ளது இப்பகுதியில் நடமாடும் போது பாதுகாப்பு அதிகாரி உடனிருக்கவேண்டும் என்பது உத்தரவு.

பாராளுமன்றத்திற்கு வெளியில் மாத்திரமல்ல, கட்டடத்தினுள் திடீர்ச் சோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பாராளுமன்றக் கூட்டங்களைப் பார்ப்பவர்களின் எண்ணிக்கையும் பாதுகாப்புக் காரணமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

**சிறிலங்கா**

பகுதிக்கு வந்து காங்கேசன்துறை துறைமுக இறங்கு துறைப் பகுதியில் தரித்து நிற்கின்றது, இக்கப்பலில் இருந்து இறக்கப்படும் பொருள்களை யாழ் அரசாங்க அதிபர் ஊடாக யாழ். மாவட்ட மக்களுக்கான நிவாரணமாக வழங்குவதன் மூலம் யாழ் மாவட்டத்தில் சிவில் நிர்வாகத்தை சீர்செய்ய முடியும் என்றுகொழும்புஅத்தியாவசிய சேவைகள் திணைக்களம் எதிர்பார்க்கின்றது.

மேற்படி உணவுப்பொருள்களை கப்பலில் இருந்து இறக்குவதற்கு. வேண்டிய ஊழியர்கள் கொழும்பில் இருந்து விமானங்கள்மூலம் காங்கேசன்துறை துறைமுகத்திற்கு அழைத்து வரப்பட்டுள்ளனர். (க)

# பா. மக்கள் கட்சித் தலைவர் ராமதாஸ் உண்ணாவிரதம்

(சென்னை)

சட்டப் பேரவையில் பண்ருட்டி ராமச்சந்திரன் தாக்கப்பட்டது தொடர்பாக பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் எஸ் ராமதாஸ் காலவரையற்ற உண்ணாவிரதத்தை மேற்கொண்டிருக்கிறார். அவர் உண்ணாவிரதத்தைக் கைவிட வேண்டும் என்று தோழமைக் கட்சித் தலைவர்கள் விடுத்த கோரிக்கையை ராமதாஸ் நிராகரித்தார்.

தமது கோரிக்கை நிறைவேற்றப்படும்வரை தமது உண்ணாவிரதம் தொடரும் என்று அவர் கூறினார்.

இதனிடையே செய்தியாளரிடம் பேசிய பண்ருட்டி ராமச்சந்திரன், சட்டப் பேரவையில் நேற்று முன்தினம் நடந்த சம்பவத்திற்கு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா வருத்தம் தெரிவிக்கும் வரை தான் சபையைப் பகிஷ்கரிக்கப் போவதாகத் தெரிவித்தார்.

# தமிழ் ஆசிரியர்களின் பயிற்சி காலம் நீடிப்பு

(நல்லூர்)

தேசிய இளைஞர் சேவைகள் சபையால் இணைந்து பயிற்சிபெறும் தமிழ் மொழி ஆசிரியர்களின் பயிற்சிக்காலம் மேலும் ஒரு வருடத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளது.

தேசிய இளைஞர் சேவைகள் சபையின் தமிழ்மொழி ஆசிரியர்கள் மூன்று வருடகாலப் பயிற்சியைப் பெற்று வருகிறார்கள். மூன்று வருடகாலம் முடிவடையும் திகதியிலிருந்து மேலும் ஒரு வருடகாலத்திற்குப் பயிற்சிக்காலத்தை நீடிப்பதென கல்விச்சேவை ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள 91/11 சுற்று நிருபம் மூலம் கல்விச்சேவை ஆணைக்குழுவின் செயலர் எஸ். வீரரத்ன சகல மாகாணக் கல்விப்பணிப்பாளர்களுக்கும், மேலதிக கல்விப்பணிப்பாளர்களுக்கும் அறிவித்துள்ளார்.

சேவைக்காலத்தில் எவ்வாறு இவர்களுக்கு சம்பளம் வழங்கப்பட்டதோ அவ்வாறே இந்த ஒரு வருடகாலத்திற்கும் சம்பளக்கொடுப்பனவு வழங்கப்படவேண்டும் எனவும் சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**சிங்கள**

ரத்தினா மகாமாயபுர வீடமைப்புத் திட்டத்திற்கு அண்மையில் அடிக்கல்நாட்டினார். அன்றைய நிகழ்ச்சியில் ஏற்கனவே நிர்மாணிக்கப்பட்ட வீடு ஒன்றும் கையளிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் பல பௌத்த பிக்குமார் கலந்து கொண்டனர்.

அதேவேளை தம்பலகாமம் என்னும் திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள பழம் பெரும்தமிழர்குடியிருப்புக்கிராமத்தின்ஒருபகுதிக்கு'லக்விஜேகம' என்று புதிய பெயர் சிறிலங்கா அரசால் பெயர் சூட்டப்பட்டுள்ளது. கண்ணிவெடியில் சிக்கி உயிரிழந்த மேஜர் ஜெனரல் லக்கிவிஜேயரட்ண, பிரிகேடியர் பெலீஸ் ரா அதிபர் நிச்சேர் விஜயசேகரா ஆகியோரின் நினைவாக இப் பெயர் சூட்டப்பட்டிருப்பதாக சிறிலங்கா அரசு அறிவித்துள்ளது.


## மரண அறிவித்தல்

### மாணிக்கம் கனகசுந்தரம்

நுணாவில் கிழக்கு சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்ட மாணிக்கம் கனகசுந்தரம் அவர்கள் நேற்றுக் காலமானார். அன்னாரின் அடக்க ஆராதனை இன்று மாலை 4 மணிக்கு ''ஜோய்கொட்'', வெஸ்மன் ஒழுங்கை, சாவகச்சேரியில் நடைபெறும்; இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(R- 1517)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 06 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.